**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை–திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 22–ம் நாள் திங்கட்கிழமை**

**CC.No.578/2020**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்1 மாதவரம் காவல் நிலையம்
குற்ற எண்.410/2019 .......குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

1. யஸ்வந்த் (எ) யஸ்வந்த் ராவ், வயது.34,

த/பெ. செல்வராஜ்,
எண்.78, பெரியார் தெரு,
வியாசர்பாடி, சென்னை-39.

2. குமார் (எ) குமரன், வயது.35,

த/பெ. லோகநாதன்,
எண்.4/108, மொளச்சூர்,
சுங்குவார்சத்திரம், காஞ்சிபுரம். ............எதிரிகள்

CASE SUMMARY

| SI.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | Accused A1 - 22.09.2020 – 08.12.2020<br>Accused A2 - 04.07.2019 - 03.10.2019 |
| II. | Date of filling of Final Report in court | 11.12.2020 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 26.02.2025 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1- 17.06.2026 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 22.06.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

DEEPA P Digitally signed by DEEPA P Date: 2026.06.22 19:01:09 +0530

இவ்வழக்கானது 11.12.2020–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 22.06.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.தமிழ், அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் கடந்த 04.07.2019 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் சாட்சி–1 வரதராஜன் என்பவர் அவரது வேலைக்கு செல்ல வேண்டி அவரது சைக்கிளில் எம்1 மாதவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சாஸ்திரி நகர் சிக்னலுக்கு அடுத்துள்ள புதிதாக கட்டப்பட்டு வந்த மெரிடியன் மருத்துவமனைக்கு அருகே வந்து கொண்டிருந்தபோது 1வது எதிரி யஸ்வந்த் (எ) யஸ்வந்த் ராவ், 2வது எதிரி குமார் (எ) குமரன் ஆகியோர் சாட்சி–1யிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு முகவரி கேட்பது போன்று சாட்சி–1ன் அருகில் சென்றபோது சாட்சி–1 தனக்கு தெரியாது என்று கூறி அங்கிருந்து நகர முற்பட்ட சாட்சி–1 வரதராஜனை எதிரிகள் இருவரும் சட்டவிரோதமாக வழிமறித்து 1வது எதிரி சாட்சி–1யை பார்த்து பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் பேசி சாட்சி–1யிடம் பணத்தை கேட்டு மிரட்டியபோது சாட்சி–1 பணம் இல்லை என்று கூறியதால் 1வது எதிரி அச்சுறுத்தி மிரட்டி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து 2வது எதிரி பார்த்து டேய் குமாறு அவன பிடிடா என்று சொல்ல உடனே சாட்சி–1யை, 2வது ெதிரி இறுக்கி பிடித்து கொள்ள 1வது எதிரி அவரிடமிருந்த கத்தியை எடுத்து சாட்சி–1ன் கழுத்தில் வைத்து அழுத்தி சாட்சி–1க்கு உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி சாட்சி–1ன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 2500/–யையும் சாம்சங் பட்டன் டைப் செல்போனையும் OPPO டச் செல்போனையும் கொள்ளையடித்தார் என்றும், அந்த சமயத்தில் சாட்சி–1 திருடன் திருடன் என்று சத்தம் போட சத்தத்தை கேட்டு அருகில் இருந்த பொது மக்கள் சிலர் எதிரிகள் இருவரையும் பிடிக்க ஓடி வந்தபோது 1வது எதிரி கத்தியை எடுத்துக் காட்டி யாராவது தங்கள பிடிக்க வந்தீங்க இந்த கத்தியாலேயே குத்தி கொலை செய்து விடுவோம் என்று ரவுடி குரல் கொடுத்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும், அருகில் இருந்த சாட்சி–5 தள்ளு வண்டி டீக்கடையில் இருந்த பிஸ்கட் மற்றும் கூல்ட்ரிங்ஸ் பாட்டில்களை எடுத்து சாலையில் சரமாரியாக அடித்து பொது மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி எதிரிகள் காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 IPC இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்1 மாதவரம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 IPC கீழ் தண்டிக்கத்தக்க குற்றம்

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:14 +0530

பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்படுகிறது.

5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>

**அ)** அ.சா.1 கோபிநாத், ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன் என்றும், கடந்த 04.07.2019 அன்று மாதவரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக ஜவகர் பணிபுரிந்து வந்தபோது காலை 10 மணி திரு.வரதராஜன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 410/2019 ஆக இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து, மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்து, புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் எதிரிகளை தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் வரதராஜன், ஆனந்தன், வெங்கட்ரமணன், ஜெகதீசன், தங்கராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்து, பின்னர் பிரதீப், மாடசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த உடைந்த கண்ணாடி துண்டுகள் (6 துண்டுகளை), கற்கள்–3 அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் ஆனது அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்து, பின்னர் சாட்சிகள் பிரதீப், மாடசாமி ஆகியோர்ளை விசாரணைச் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்து, பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்று பகல் 13.30 மணிக்கு மாதவரம் மூலக்கடை சந்திப்பு அருகே 2வது எதிரியை கைதுச் செய்து தேக பரிசோதனை செய்த போது எதிரியிடம் இருந்த குற்ற எண் 392/2019 க்குரிய ஓப்போ செல்போன், கத்தி–1 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கோபிநாத், ராமர் முன்னிலையில் ஒப்புக்கொண்டதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமானது பதிவு செய்து, மேற்படி தடய பொருட்களான 392/2019–க்குரியது அந்த குற்ற எண்ணின் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், பின்னர் 2வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், 1வது எதிரியை தேடி வந்த நிலையில் 22.09.2020 காலை 12 மணியளவில் மூலக்கடை ஜங்ஷன் அருகே இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கைது செய்து சோதனை செய்த போது அவரிடம் இருந்த இந்த குற்ற வழக்கிற்கு உபயோகித்த கத்தி–1, ஓப்போ செல்போன்–1–னை மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதே சாட்சிகள் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவுச் செய்து சாட்சிகளின் சாட்சிகயங்களை தனித்தனியதாக பதிவுச் செய்து,

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:19 +0530

பின்னர் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார்கள் என்றும், கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடுச் செய்து, பின்னர் புலன் விசாரணை அதிகாரி பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால், இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், தான் விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் முன்னர் கூறியதையே கூறியதால் மறுவாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை என்றும், தான் விசாரித்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) @ இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 506(ii) கீழ் பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து, சட்டப்பிரிவு மாற்று அறிக்கையானது அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 அரசு தரப்பு சாட்சி எதிரிகளுக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரிகளானவர்கள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 IPC இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 04.07.2019 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் சாட்சி–1 வரதராஜன் என்பவர் அவரது வேலைக்கு செல்ல வேண்டி அவரது சைக்கிளில் எம்1 மாதவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சாஸ்திரி நகர் சிக்னலுக்கு அடுத்துள்ள புதிதாக கட்டப்பட்டு வந்த மெரிடியன் மருத்துவமனைக்கு அருகே வந்து கொண்டிருந்தபோது 1வது எதிரி யஸ்வந்த் (எ) யஸ்வந்த் ராவ், 2வது எதிரி குமார் (எ) குமரன் ஆகியோர் சாட்சி–1யிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு முகவரி கேட்பது போன்று சாட்சி–1ன் அருகில் சென்றபோது சாட்சி–1 தனக்கு தெரியாது என்று கூறி அங்கிருந்து நகர முற்பட்ட சாட்சி–1 வரதராஜனை எதிரிகள் இருவரும் சட்டவிரோதமாக வழிமறித்து 1வது எதிரி சாட்சி–1யை பார்த்து பொது இடத்தில் தகாத வார்த்தைகளால் பேசி சாட்சி–1யிடம் பணத்தை கேட்டு மிரட்டியபோது சாட்சி–1 பணம் இல்லை என்று கூறியதால் 1வது எதிரி அச்சுறுத்தி மிரட்டி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து 2வது எதிரி பார்த்து டேய் குமாறு அவன பிடிடா என்று சொல்ல உடனே சாட்சி–1யை, 2வது ெதிரி இறுக்கி பிடித்து கொள்ள 1வது எதிரி அவரிடமிருந்த கத்தியை எடுத்து சாட்சி–1ன் கழுத்தில் வைத்து அழுத்தி சாட்சி–1க்கு உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி சாட்சி–1ன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 2500/–யையும் சாம்சங்

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:24 +0530

பட்டன் டைப் செல்போனையும் OPPO டச் செல்போனையும் கொள்ளையடித்தார் என்றும், அந்த சமயத்தில் சாட்சி−1 திருடன் திருடன் என்று சத்தம் போட சத்தத்தை கேட்டு அருகில் இருந்த பொது மக்கள் சிலர் எதிரிகள் இருவரையும் பிடிக்க ஓடி வந்தபோது 1வது எதிரி கத்தியை எடுத்துக் காட்டி யாராவது தங்கள பிடிக்க வந்தீங்க இந்த கத்தியாலேயே குத்தி கொலை செய்து விடுவோம் என்று ரவுடி குரல் கொடுத்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும், அருகில் இருந்த சாட்சி−5 தள்ளு வண்டி டீக்கடையில் இருந்த பிஸ்கட் மற்றும் கூல்ட்ரிங்ஸ் பாட்டில்களை எடுத்து சாலையில் சரமாரியாக அடித்து பொது மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி எதிரி காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 சாட்சியை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

**9)** எதிரிகள் தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தங்கள் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

**10)** அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.9 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்ட போதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** அ.சா.1 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில், " அ.சா.1 கோபிநாத், ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 04.07.2019 அன்று காலை 10 மணி திரு.வரதராஜன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 410/2019 ஆக இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து, மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்து, பின்னர் பிரதீப், மாடசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த உடைந்த கண்ணாடி துண்டுகள் (6 துண்டுகளை), கற்கள்−3 அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், பார்வை மகஜர் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்து, பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்று பகல் 13.30 மணிக்கு மாதவரம் மூலக்கடை சந்திப்பு அருகே 2வது எதிரியை கைதுச் செய்து தேக பரிசோதனை செய்த போது எதிரியிடம் இருந்த குற்ற எண் 392/2019−க்குரிய ஒப்போ செல்போன், கத்தி−1

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:29 +0530

கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி, மேற்படி தடய பொருட்களான 392/2019–க்குரியது அந்த குற்ற எண்ணின் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், பின்னர் 2வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், 1வது எதிரியை தேடி வந்த நிலையில் 22.09.2020 காலை 12 மணியளவில் மூலக்கடை ஜங்ஷன் அருகே இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கைது செய்து சோதனை செய்த போது அவரிடம் இருந்த இந்த குற்ற வழக்கிற்கு உபயோகித்த கத்தி–1, ஓப்போ செல்போன்–1–னை மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடுச் செய்து, இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், தான் விசாரித்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) @ இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 506(ii) கீழ் சட்டப்பிரிவு மாற்று அறிக்கையானது அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு, பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து, செய்து பின்னர் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையினை புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்ததினை பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் வேறு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது. இருப்பினும் அவர் அலுவல் சாட்சி ஆவா்ர. மேலும் இவ்வழக்கு சம்பவத்தினை பொறுத்து சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் எவரும் அரசு தரப்பில் விசாரணை செய்து, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் புலன் விசாரணை அதிகாரி வழக்கின் தடயப் பொருட்களை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே அ.சா.1 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளிகள் என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிகளுக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக**

i) எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 341,294(b),392,336,427,506(ii) r/w 34 கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீ்ரப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:35 +0530

(iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் ஜீன் மாதம் 22–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

மாதவரம்

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திரு.கோபிநாத், ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.07.2019 | புகார் |
| அ.சா.ஆ.2 | 04.07.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 04.07.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 04.07.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 | 04.07.2019 | கைப்பற்றுதல் மகஜர்கள் |
| அ.சா.ஆ.7 | 11.12.2020 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.06.22 19:01:49 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**